DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW3 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : செல்வராணி |
| Father's Name | : முருகேசன் |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2024.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.3 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் குள்ள மூப்பன்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் கூட்டுறவு சங்கத்தில் பால் சேகரிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். அ.சா.2 யை தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். என் மாமனார் பெயர் சடையன், என் மாமியார் பெயர் பழனியம்மாள். அவர்களுக்கு முருகேசன், சின்னுசாமி ஆகியோர்கள் மகன்கள். இருவருக்கும் திருமணமாகிவிட்டது. என் மாமனார் சிமெண்ட் தொழிற்சாலையில் பணிபுரிந்தார். அது போக நீர் ஊற்று சோதிக்கும் வேலையும் செய்து வந்தார். அந்த சமயத்தில் 1981 ல் மூலப்பாதையில் 4.58 செண்ட் நிலம் கிரையம் வாங்கினார். என் கணவர் பால் சேகரிப்பு வேலையும் என் கொளுந்தனார் லாரி ஓட்டுநராகவும் வேலை செய்து வந்தார்கள். 1999 ல் என் கொளுந்தனார் ஒரு சாலை விபத்தில் இறந்துவிட்டார். அதன் பிறகு சின்னுசாமியின் மனைவி பேபி, என் மாமியார்

பழனியம்மாள் ஆகியோர் சேர்ந்து என் மாமனாரிடம் சொத்தை சரிபாதியாக பிரித்து தங்களுக்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று தகராறு செய்து வந்தார்கள். அது சம்பந்தமாக 2005ல் பஞ்சாயத்து பேசினார்கள். அந்த பஞ்சாயத்தில் என் மாமியாரின் தம்பி சின்னண்ணன் என்பவரும் கருப்பணன், செல்வராஜ், தேவேந்திரன், ரவி ஆகியோரும் கலந்து கொண்டார்கள். அப்போது பேரன், பேத்திகள் சிறு வயதாக இருப்பதால் இப்போது சொத்தை பிரித்து கொடுக்க முடியாது என்று என் மாமனார் சொல்லிவிட்டார். அதனால் அன்றைய தினமே இரவு பஞ்சாயத்து பேசிய மேற்குறிப்பிட்ட நபர்கள் என் மாமனாரை அடித்து போட்டு விட்டு சென்று விட்டார்கள். அது சம்பந்தமாக என் மாமனார் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நாங்கள் அவருக்கு சிகிச்சை செய்து எங்கள் வீட்டில் வைத்து பராமறித்து வந்தோம். அதன் பிறகு 2000ம் ஆண்டில் என் மாமனார் தன்னுடைய சொத்தை சரிபாதியாக பிரித்து மேல்புற பாதியை என் கணவர் பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார். அதன் பிறகு 2006ல் மீதம் இருந்த கிழபுற பாகத்தையும் என் கணவர் பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார். பின்பு என் மாமனாருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகள் மற்றும் கடன் தீர்ப்பதற்காக மேற்படி சொத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்ய ராஜேந்திரன், ராஜமாணிக்கம் ஆகியோருடன் கிரைய ஒப்பந்தம் செய்தோம். அதை தெரிந்து கொண்ட பேபி, பழனியம்மாள் ஆகியோர் 1ம் எதிரியிடம் சென்று நியாயம் சொல்லியுள்ளார்கள். அதன் பின்னிட்டு பரமசிவம் எங்கள் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அடியாட்களை சேர்த்து கொண்டு திட்டமிட்டு அதன் படி 2007 ஆம் ஆண்டு ஒரு நாள் 2, 3 எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து எங்கள் மாமனாரை நிலத்தடி நீர் சோதிக்க வேண்டும் என்று சொல்லி மகுடஞ்சாவடிக்கு அழைத்து சென்றார்கள். அன்று காலை சுமார் 8.30 மணிக்கு போன என் மாமனார் மாலை வரை வீட்டிற்கு வரவில்லை என்பதால் நாங்கள் பக்கத்து காட்டுகாரர்கள் சொன்ன தகவலின் பேரில் என் மாமனாரை தேடி பார்த்தோம். கிடைக்கவில்லை என்பதால் இது சம்பந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் என் கணவர் புகார் கொடுத்தார். அதன் பிறகு 10 நாட்கள் கழித்து என் மாமனார் அவராகவே வீட்டிற்கு வந்து விட்டார். நாங்கள் அவரிடம் விசாரித்ததற்கு அவர் அழுது கொண்டே எங்களிடம் 2, 3 எதிரிகள் நீர் பரிசோதிக்க வேண்டும் என்று அழைத்து சென்றதாகவும், ஆனால் சொரியன்பட்டியில் உள்ள ஒரு வீட்டில் அடைத்து வைத்ததாகவும் 2006ல் மகன் பெயரில் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு தங்கள் பெயரில் கிரைய ஆவணம் எழுதி வைக்க வேண்டும் என்றும் இல்லை என்றால் கொன்றுவிடுவோம் என்றும் மிரட்டியதாகவும், ஆனால் தான் அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை என்றும் பின்னர் இருகாலுரில் உள்ள பஞ்சாயத்து அலுவலகத்தில்

வைத்து மிரட்டியதாகவும் அதன் பின்னர் ஒரு ஈச்சங்காட்டு புதையில் வைத்து மிரட்டியதாகவும் அதன் பிறகு மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள ஈஸ்வரன் கோவிலில் ஒரு மரத்தில் அவரை கட்டி வைத்து பத்திரத்தில் கட்டாயப்படுத்தி கை விரல் ரேகை பெற்று கொண்டதாகவும் சொன்னார். அப்போது அவரிடம் பணம் கொடுத்தது போல் ஒரு புகைபடமும் எடுத்து கொண்டதாக சொன்னார். அதன் பின்பு அவரை ஒரு காரில் ஏற்றி அடையாளம் தெரியாத இடத்தில் தூரமாக கொண்டு சென்று இறக்கிவிட்டாகவும் அப்போது நடந்த விசயத்தை மகனிடம் சொன்னால் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டியதாகவும் சொன்னார். இந்த சம்பவங்கள் நடக்கும் போது 2, 3 எதிரிகளுடன் 1 ம் எதிரி, பேபி, பழனியம்மாள், தமிழ்செல்வன், கிருஷ்ணன், பலராமன், செந்தில், சின்ராசு, பழனிசாமி மற்றும் பத்திர எழுத்தர் ஆகோயரும் உடன் இருந்ததாக சொன்னார். அதன் பின்பு என் கணவர் என் மாமனாரை காவல் நிலையம் அழைத்து சென்று சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தார். ஆனால் அந்த புகாரின் மீது போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் பின்பு என் கணவர் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ராஜேந்திரன், ராஜமாணிக்கம் ஆகியோருடன் சேர்ந்து தமிழ்செல்வன், கிருஷ்ணன், ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவும் பெற்றோம். அதன் பிறகு தடை உத்தரவு அமலில் இருக்கும் போது தமிழ்செல்வன், கிருஷ்ணன், ஆகியோர்கள் சேர்ந்து போலியாக கணபதி, தங்கவேல், கோவிந்தராஜ் 4 முதல் 6 எதிரிகள் பெயரில் கிரைய பத்திரம் ஏற்படுத்தினார்கள். அதன் பின்பு 2007 ல் ஒரு நாள் தேதி மாதம் நினைவு இல்லை 1 ம் எதிரி 2 முதல் 22 எதிரிகளுடன் காலை சுமார் 10 அல்லது 11 மணிக்கு எங்கள் காட்டிற்கு வந்து காட்டை சுற்றிலும் கம்பி வேலி அமைத்தார்கள். தற்காலிக குடிசை அமைத்தார்கள். அதற்கு மின் இணைப்பு வாங்கினார்கள். அந்த நிலத்தில் ஆழ்துளை கிணறும் அமைத்தார்கள். அதன் பின்பு அவ்வபோது 1 ம் எதிரியின் அடியாட்கள் அங்கு வந்து நிலத்தை காலி செய்ய வேண்டும் என்று எங்களை துன்புறுத்தி வந்தார்கள். அதன் பின்பு 24.11.2009 ல் அன்று காலை சுமார் 10.00 மணிக்கு நானும், என் கணவரும் வீட்டில் இருந்தோம். அப்போது 1 ம் எதிரியும் மற்றும் அனைத்து ஆஜர் எதிரிகளும் இருசக்கர வாகனத்தில் வந்து 1 ம் எதிரி எங்களிடம் நாளை காலை 10.00 சார்பதிவாளர் அலுவலகம் வந்து நாங்கள் சொல்லும் இடத்தில் கையெழுத்து போட்டுவிட்டு பேசாமல் சென்றுவிட வேண்டும் என்றும் சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். அதே போல் மறுநாள் காலை 10.00 மணிக்கு எங்களை 1 ம் எதிரியும், அவருடன் மணிவேல், கோவலன், சுப்புரு ஆகியோர்கள் காரில் வந்து என்னையும் என் கணவர், என் மாமனார், என் மகன், மகள் ஆகியோரை கட்டாயப்படுத்தி சார்பதிவாளர்

அலுவலகம் அழைத்து சென்றார்கள். அங்கு எங்களுக்கு எதிரிகள் மிரட்டல் விடுத்ததால் உயில் பயத்தில் அவர்கள் சொன்ன இடத்தில் நாங்கள் கையெழுத்து செய்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்பு 25.11.2009 அதிகாலை 5.00 மணிக்கு JCB, டிராக்டர், ஆகியவற்றுடன் பரமசிவம், மற்றும் 2 முதல் 22 எதிரிகள் எங்கள் நிலத்திற்கு வந்து எங்களை வீட்டை விட்டு வெளியே இழுத்து விட்டார்கள். இரண்டு ஓட்டு வீடுகள், மாமரம், சப்போட்டா மரம், தென்னை மரங்கள், தண்ணீர் தொட்டி ஆகியவற்றை இடித்து கீழே தள்ளி அப்புறபடுத்தி நிலத்தை நிரவி விட்டார்கள். இது சம்பந்தமாக என் கணவர் போலீசில் புகார் கொடுத்தார். ஆனால் எதிரிகளின் அரசியல் செல்வாக்கு காரணமாக போலீசார் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் நாங்கள் குள்ள மூப்பன்காடு என்ற இடத்திற்கு சென்று அங்கு குடியிருந்தோம். அதன் பின்பு சுமார் 20 நாட்கள் கழித்து நீங்கள் எழுதி கொடுத்த கிரையம் செல்லாது என்றும் பவர் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்றும் பரமசிவம், வைத்தி 1, 9 எதிரிகள் வந்து மிரட்டினார்கள். அதன் பின்பு மறுநாளே எங்களை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். நாமக்கல் பாவை கல்லூரியில் படித்து கொண்டிருந்த என் மகனை எதிரிகள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து வந்திருந்தார்கள். அங்கு என் மகனையும் மிரட்டி என் மகனிடமும் எங்களிடமும் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். எங்களுக்கு இருந்த பயத்தில் அது என்ன பத்திரம் என்று எங்களுக்கு தெரியவில்லை. அதன் பிறகு 2 நாட்கள் கழித்து 1 ம் எதிரியும் அவருடன் 15 ம் எதிரியும் எங்கள் வீட்டிற்கு வந்து சிவில் வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று சொல்லி பூர்த்தி செய்யப்படாத வெள்ளை மற்றும் பச்சை தாளில் என் கணவரிடம் கையெழுத்து வாங்கி சென்றார்கள். அதன் பிறகு நானும் என் கணவரும் எதிரிகள் மீது சேலம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தோம். புகார் தேதி நினைவு இல்லை. எங்கள் புகாரின் மீது போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள். அந்த புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-செல்வராணி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.